வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.4380/ஆ4/2025 நாள்.04.11.2025

பொருள் தேர்வுகள் –வேலூர் மாவட்டம் – 2025–2026 ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகள் –பள்ளி மாணவர்கள் பெயர் பட்டியல் –EMIS விவரங்கள் அடிப்படையில் தயாரித்தல் மற்றும் மாணவர்கள் விவரங்கள் பதிவேற்றம் செய்தல் மற்றும் தேர்வுக்கட்டணம் செலுத்துவது குறித்த சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் அனைத்து வகை உயர்/மேல்நிலை தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் முதல்வர்கள் –தெரிவித்தல் –சார்பு

பார்வை அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.013061 /பி1/2025 நாள் 31.10.2025

==============

பார்வையில் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின் படி, வேலூர் மாவட்டத்தில் , 2025–2026 ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகளுக்கான தற்பொழுது மார்ச்/ஏப்ரல்–2026 பெயர்பட்டியல் தயாரிப்பதற்கு அனைத்து வகை பள்ளித்தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் 31.10.2025 (வெள்ளிக்கிழமை) முதல் 19.11.2025 (புதன்கிழமை) வரையிலான நாட்களில் https://dgeapp.tnschools.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, பத்தாம் வகுப்பு பெயர்ப்பட்டியலை இத்துடன் இணைப்பில் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநரின் வழிமுறைகளை பின்பற்றி, செயல்படுமாறு அனைத்து வகை உயர்/மேல்நிலை தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளித் தலைமையாசிரியர்கள், பத்தாம் வகுப்பு மாற்றுத் திறனாளி மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம். மாற்றுத் திறனாளிக்கான அடையாள அட்டையின் நகல் அல்லது மருத்துவக் குழுவின் பரிந்துரைக் கடிதம் ஆகியவற்றை பத்தாம் வகுப்பு , வேலூர் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் இரண்டு பிரதிகளில் 14.11.2025 –க்குள் ஒப்படைக்கவேண்டும்.

இணைப்பு :

1. பார்வை கடிதம்
2. மாற்றுத்தி திறனாளர் விண்ணப்ப படிவம்
3. அரசாணை

// ஓம்.சு.தயாளன் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
அனைத்து வகை உயர்/மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் முதல்வர்கள் வே.மா.

நகல் :

1. மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை/தனியார் ) வே.மா,தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.
2. மாவட்ட கல்வி அலுவலர்(தொடக்கக் கல்வி ) அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.